O.S. No: 55/2019
பெயர்: பிரபு
**பி.சா. 2**
11-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 2.40**

**5,6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு கிரயம் செய்தவருக்கும் வாதிக்கும் இடையே நடந்த வழக்குகளில் அரசு தரப்பினராக இல்லை என்றால் சரி. எந்த பத்திரமாக இருந்தாலும் அது முறையாக பதிவிற்கு வந்தால் பதிவு செய்து கொடுப்பார்கள் என்றால் ஆமாம். அந்த சொத்துக்குரிய கட்டணம் மற்றும் இதர விசயங்கள் சரியாக இருந்தால் சார்பதிவாளர் ஆவணத்தை பதிவு செய்வார் என்றால் ஆமாம்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் முழு விவரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். ஒரு சொத்தை வாங்கும் போது அதன் மூலப்பத்திரத்தை வாங்கி பார்க்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்திற்கான அசல் மூலப்பத்திரங்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். இந்த சொத்து ஆதியில் முகமது கௌவுஸ் எனபவருக்கு சொந்தமானது என்றால் அவருக்கு பாகப்பத்திரம் மூலமாக கிடைத்தது. அந்த பாகப்பத்திரம் 19.05.1992 ல் ஏற்பட்டது என்றால் ஆமாம். அந்த 19.05.1992 பாகப்பத்திரத்தின் அசலை நான் கிரயம் பெற்ற போது என்னிடம் கொடுத்தார்களா என்றால் அதன் நகலைத்தான் கொடுத்தார்கள். ஏனென்றால் ஒரு சொத்து மட்டும் வாங்குவதால் அசல் தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து நான் என்னுடைய வாக்குமூலத்தில் சங்கதிகள் எதுவும் கூறவில்லை என்றால் சரி. நான் கிரயம் பெற்றதாக சொல்லப்படும் தாவா சொத்து பாகப்பிரிவினை செய்த மறுநாள் 20.05.1992 அன்றே வாதிக்கு முகமது கௌவுஸ் கிரயம் செய்து

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

கொடுத்து்விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு கிரயம் பெற்ற 20.05.1992 முதல் தற்போது வரை தாவா சொத்தை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு முன் பாத்தியஸ்தராக நான் சொல்லும ரீமா பேகம் 2004லிலேயே தனது கணவரை 4 வருடங்களாக காணவில்லை என்றும், அவரை கண்டுபிடித்து தருமாறும் HCP 54/2004 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்து விசாரணைக்கு உத்தரவு பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தொடர்ந்து 1,2 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்ய முற்பட்டதால் கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 341/2011 என்ற வழக்கு தாக்கல் செய்து அதில் 1,2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து 09.06.2017 அன்று வாதிக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் வாதி தரப்பில் தாக்கல் செய்த விவரம் நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. ரீமா பேகம் லால்குடி மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 60/2012 என்ற வழக்கு தன் கணவரை 7 வருடமாக காணவில்லை என்பதால் அவரை இறந்தவராக கருதி தனக்கு வாரிசு சான்று வழங்க வேண்டும் என்ற இவ்வழக்கு வாதியை பிரதிவாதியாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்து இந்த வழக்கின் வாதி எதிர் உரை தாக்கல் செய்ததும் அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதன் உத்தரவு ,பிராது நகல் ஆகியவை இந்நீதிமன்றத்தில் வாதி தரப்பு சான்றாவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இவ்வாறு தொடர்ச்சியாக வழக்குகள் நடைபெற்று வந்த நிலையில் முதல் பிரதிவாதி தனக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாமல் 2ம் பிரதிவாதி பெயரில் ஒரு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தின் பின்புறத்தில் ரீமா பேகத்தின் கணவர் 19.02.2009ம் தேதி திருச்சி புத்தூர் பெரிய ஆஸ்பத்திரி எதிரே இறந்து விட்டதாக ஒரு இறப்பு சான்று இணைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2009ல் இறந்து விட்டதாக இறப்பு சான்று தாக்கல் செய்துள்ள நிலையில் எவ்வாறு 2012ல் தன் கணவர் இறந்து விட்டதாக விளம்புகை செய்யக்கோரி ரீமா பேகம் வழக்கு

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. 22.09.2015 அன்று திருப்பனந்தாள் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு முதல் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மென்டை ரத்து செய்ய வேண்டும் என்று வாதி கொடுத்த ஆட்சேபனை பற்றி எனக்கு தெரியாது. 27.01.2016 அன்று பதிவுத்துறை தலைவருக்கும், கும்பகோணம் மாவட்ட பதிவாளருக்கும் வாதி அளித்த புகார் பற்றி எனக்கு தெரியாது. அதன் பின்னர் 1,2 பிரதிவாதிகள் மோசடி செய்துவிட்டதாக தஞ்சாவூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. சென்னை உயர்நீமன்றம் மதுரை கிளையில் CrlOP 1344/2016ல் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக உத்தரவு பெற்றுள்ளார் என்றால் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் மீது தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவில் குற்ற எண். 05/2016ல் கடந்த 13.04.2016 அன்று மோசடி வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக மோசடியாக செயல்படுவதாக குற்ற வழக்கு பதிவு செய்வதற்கு உத்தரவு பெற்ற பின்னர் 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு 07.03.2016ம் தேதி கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் மோசடியாக 3ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்து்விட்டார்கள் அந்த பதிவை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் WP 15138/2016 என்ற எண்ணில் நீதிப்பேராணை தாக்கல் செய்து அதில் கும்பகோணம் மாவட்ட பதிவாளர் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கக்கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த விசாரணையில் தங்களால் விசாரித்து உத்தரவிடமுடியாது என்றும், நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும் படி சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த சூழ்நிலையில் என் பெயருக்கு 3ம் பிரதிவாதி ஒரு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். இந்த சொத்து கும்பகோணம் மாவட்ட எல்லைக்குள் இருக்கும் போது லால்குடியில் வைத்து பதிவு செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றால் எனக்கு அங்கே பதிவு செய்ய ஆப்சன் இருந்ததால் பண்ணினேன். எனக்கு விற்ற ராமச்சந்திரன் அந்த சொத்தை எவ்வளவு பணம் கொடுத்து வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் எவ்வளவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளிடம் ரூ.5,00,000

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

கொடுத்து வாங்கியது போல் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் ராமச்சந்திரனிடமிருந்து நான் ரூ.1,60,000/—க்கு வாங்கியதாகத்தான் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் நான் கைடு லைன் வேல்யு படி வாங்கினேன். எதற்காக ராமச்சந்திரன் அதிக விலைக்கு கிரயம் பெற்று என்னிடம் குறைவான விலைக்கு விற்றார் என்றால் நான் ராமச்சந்திரனிடம் டிமான்ட் டிராப்ட் ஆக ரூ.7,00,000 கொடுத்தேன். கைடு லைன் வேல்யு படி பத்திரம் பதிவு செய்து கொண்டேன். நான் ரூ.7,00,000 3ம் பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கு சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து வில்லங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த கிரய பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் ரீமா பேகத்தின் கணவர் முகமது கௌவுஸ் 7 வருடங்களாக காணவில்லை என்ற அவரது மனைவி திருச்சி கே.கே.நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு 3ம் பிரதிவாதி சொல்லி எனக்கு தெரியும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். முகமது கௌவுஸ் இறந்த தேதியோ எங்கு இறந்தார் என்றோ எனக்கு தெரியாது. ஆனால் என்னுடைய ஆவணங்களில் முகமது கௌவுஸ் திருச்சியில் இறந்துவிட்டதாக ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். முகமது கௌவுஸ் இதுநாள் வரை உயிருடன் இருக்கிறாரா இறந்துவிட்டரா என்று தெரியாது. இந்த வழக்கு சொத்தின் எந்த விவரமும் தெரியமால் அதன் முன் விவரங்களை ஆராயாமல் நான் போனபைடு பர்ச்சேசர் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றாலும், அதில் எந்த வகையிலும் பிரதிவாதிகளுக்கு உரிமையோ பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட செட்டில்மென்ட் பத்திரம் மற்றும் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் , 3ம் பிதிவாதியிடமிருந்து நான் எழுதி வாங்கிய கிரய பத்திரம் ஆகிய அனைத்தும் நீக்கரவு செய்யத்தக்கது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்த பிறகு ஏன் 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து 3ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் தெரியாது. நான் முகமது கௌசிற்கு பாகம் கிடைத்த தேதியில் இருந்து நான் கிரயம் வாங்கும் தேதிவரை வில்லங்கம் போட்டு பார்த்தேனா

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

என்றால் இல்லை. 1 முதல் 4 வரை உள்ள பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் எங்கள் செல்வாக்கினால் வாதி உயர்நீதிமன்றம் வரை சென்று உத்தரவு பெற்றிருந்தும் அதற்கு எதிராக சார்பதிவாளர் அலுவலத்தில் பத்திரங்கள் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 3.19**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.